# INTERNATIONAL WORKSHOP ON FUNCTIONAL MATERIALS (IWFM 2016) on 29-11-2016.

## Dinakaran

சங்கரா பல்கலையில்

### நானோ தொழில்நுட்ப கருத்தரங்கம்




சங்கரா பல்கலைகழகத்தில் நடந்த சர்வதேச கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி துணை வேந்தர் விஷ்ணு போத்தி தொடங்கிவைத்தார்.

காஞ்சிபுரம், நவ. 30: காஞ்சிபுரம் சங்கரா பல்கலையின் இயற்பியல் துறை சார்பில் நானோ தொழில்நுட்பம் குறித்த சர்வதேச கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. பல்கலைக் கழக துணை வேந்தர் விஷ்ணு போத்தி தலைமை தாங்கி குத்துவிளக்கேற்றி கருத்தரங்கை தொடங்கி வைத்தார். இயற்பியல் துறை தலைவர் வெங்கட்ரமணன் வரவேற்று பேசினார். இதில் சிறப்பு விருந்தினராக ஹாங்காங் நாட்டை சேர்ந்த பேராசிரியர் டாக்டர் ராய் வெள்ளைச்சாமி, சென்னை எஸ்ஆர்எம் பல்கலைக் கழகத்தை சேர்ந்த பேராசிரியர் டாக்டர் கேகேஆர் தத்தா ஆகியோர் கலந்துகொண்டு நானோ பொருட்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள், செயல்பாடுகள் குறித்தும் அதன் தொழில் நுட்பம் குறித்தும் விரிவாகப் பேசினார்கள். பல்கலைக் கழக டீன் டாக்டர் பாலாஜி, பேராசிரியர் ராகவேந்திரன் மற்றும் 200க்கும் மேற்பட்ட ஆராய்ச்சித் துறை மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# INTERNATIONAL WORKSHOP ON FUNCTIONAL MATERIALS (IWFM 2016) on 29-11-2016.

## The Hindu Tamil

### சங்கரா பல்கலையில் நானோ தொழில்நுட்ப சர்வதேச கருத்தரங்கம்

**காஞ்சிபுரம்**

காஞ்சிபுரத்தை அடுத்த ஏனாதூரில் அமைந்துள்ள சங்கரா பல்கலைக்கழகத்தில் நானோ தொழில்நுட்பம் குறித்த சர்வதேச கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது.

இயற்பியல் துறை சார்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் க.வெங்கட்ரமணன் வரவேற்றார். துணை வேந்தர் விஷ்ணு போத்தி கருத்தரங்கை தொடங்கி வைத்தார். ஹாங்காங்கைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.எல். ராய் வெள்ளைச்சாமி, சென்னை எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கே.கே. ஆர்.தத்தா ஆகியோர் நானோ பொருள்களின் ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினர்.

பல்கலைக்கழக டீன் எஸ்.பாலாஜி உட்பட 100-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், மாணவர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். இந்த கருத்தரங்குக்கான ஏற்பாட்டை இயற்பியல் துறை பேராசிரியர் வெ.ராகேவந்திரன் மேற்கொண்டார்.

# INTERNATIONAL WORKSHOP ON FUNCTIONAL MATERIALS (IWFM 2016) on 29-11-2016.

## The Eenadu



# 'చంద్రశేఖరేంద్ర'లో నానో వస్తువులపై సదస్సు

**కాంచీపురం, న్యూస్‌టుడే:** కాంచీపురం సమీపంలోని ఏణాత్తూరులో ఉన్న పరమాచార్య శ్రీ చంద్రశేఖరేంద్ర సరస్వతి విశ్వ మహా విద్యాలయంలో భౌతిక శాస్త్ర విభాగం ఆధ్వర్యంలో మంగళవారం నానో వస్తువుల ఉపయోగం అంతర్జాతీయ సదస్సు జరిగింది. ఈ కార్యక్రమాన్ని విశ్వవిద్యాలయ ఉపకులపతి ఆచార్య డాక్టరు వి.ఎస్.విష్ణుపోత్తి జ్యోతి ప్రజ్వలన చేసి ప్రారంభించారు. ఆది శంకర ఆడిటోరియంలో జరిగిన ఈ సదస్సులో ముఖ్య అతిథిగా హాంకాంగ్ సిటీ యూనివర్శిటీ ఆచార్య ఏఎల్ రాయ్ వెల్లైచామి పాల్గొన్నారు. ఈ సందర్భంగా ఆయన మాట్లాడుతూ ప్రస్తుతం మారుతున్న పరిస్థితులకు తగ్గట్టు అధునాతన టెక్నాలజీతో ఉత్పత్తి అయ్యే నానో వస్తువుల ఉపయోగం, వాటి పనితీరు గురించి వివరించారు. ఎస్ఆర్ఎం యూనివర్శిటీ ఆచార్యుడు కె.కె.ఆర్.దత్త నానో టెక్నాలజీ, ఉత్పత్తులు, పరిశోధనల గురించి వివరించారు. సదస్సులో ఆహూతులకు భౌతికశాస్త్ర హెచ్ఓడీ ఆచార్య డాక్టరు కె.వెంకట్రామన్ స్వాగతం పలకగా భౌతిక శాస్త్రం ఆచార్యులు వి.రాఘవేంద్రన్ కృతజ్ఞతలు తెలిపారు. ఈ సదస్సులో విశ్వవిద్యాలయ సైన్స్ విభాగం డీన్ బాలాజీ, డీన్ శ్రీరాం, పలువురు విద్యార్థులు పాల్గొన్నారు.




సదస్సును ప్రారంభిస్తున్న ఉపకులపతి డాక్టరు విష్ణుపోత్తి